1980 ஜூலை 31]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, குற்றச் சாட்டு பொதுவாக இருக்கிறது. தனிப்பட்ட முறையிலே எங்கே கெட்டுப் போவதைக் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டால் நடவடிக்கை எடுக்கலாம்.

ஜோலார்பேட்டைக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 85—திரு ப. சுந்தரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோலார்பேட்டைக்கு பாலாற்றிலிருந்து திருப் பத்தூருக்கு போகும் குடி தண்ணீர் குழாயிலிருந்து குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப் படும் ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனை யில் உள்ளது.

(ஆ) திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டவுடன் மாவட்ட ஆட்சியாளர் ஊரக வளர்ச்சி இயக்குநர் பரிந்துரையுடன் அரசு ஒப்புதலுக்கு அனுப்பி, ஒப்புதல் பெற்றவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, பரிசீலனையில் உள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இது நீண்ட நாட்களாகப் பரிசீலனையில் இருப் பதாகத் தெரிய வருகிறது. இதை உடனடியாக நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, பரிசீலனையைத் துரிதப்படுத்தச் சொல்லுகிறேன்.

திரு தி. அன்பழகன்: பேரவைத் தலைவரவர்களே, ஜோலார் பேட்டை பத்தாயிரம் மக்களுக்கும் அதிகமான மக்கள் தொகை யைக் கொண்ட பேரூராட்சியாகும். இது அந்தப் பகுதியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருப்பதாலும், இதற்குப் போட வேண்டிய தொகையையும் இந்த பேரூராட்சி கட்டுவதற்குத் தயாராக இருப்பதாலும், இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பே சொன்னதுபோல், துரிதப்படுத்தச் சொல்கிறேன்.

திரு வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்தை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஜோலார்பேட்டைக்கு குடிநீர் வழங்கும் திட்டம் பற்றிய கேள்வி.

சிவகங்கைப் பகுதியிலுள்ள நெட்டூர் கண்மாய்.

*வினா எண் 86—திரு செ. சிவசாமி: மாண்புமிகு நீர்ப்பாசன துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் சிவகங்கை டிவிஷனில் உள்ள நெட்டூர் கண்மாய் வெட்டு மராமத்து இல்லாமலும் கரைகள் பலப்படுத்தப்படாமலும் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, சிவகங்கை டிவிஷனில் உள்ள நெட்டூர் கண்மாய் கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் பாசனத்திற்கு உதவி செய்யக்கூடிய மிகப் பெரிய கண்மாய் ஆகும். அந்தக் கண்மாயில் ஒரு தடவை இயற்கையின் மூலம் தண்ணீர் நிரம்பிவிட்டால் ஒரு போகம் தாராளமாகப் பயிர் செய்வதற்குப் பயன்படக்கூடிய கண்மாய். அந்தக் கண்மாய் நீண்ட நாட்களாகச் சரியான முறையில் ரிப்பேர் செய்யப் படாமல் இருந்து கொண்டிருக்கிறது. தற்பொழுது நவீனப் படுத்தும் முறையிலே, உலக வங்கியிலிருந்து பெறக்கூடிய நிதியிலிருந்து அந்தக் கண்மாயை நவீனப் படுத்துவதற்கு எற்பாடு செய்யப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே உலக வங்கியினுடைய நிதி உதவி பெற்று கண்மாய்களைப் பராமரிக்கின்ற பணிகள் இன்னும் செயல்வடிவிற்கு வரவில்லை. ஆனால் இந்த நெட்டூர் கண்மாயைப் பொறுத்த வரையிலே, மடைகள் எண் 2, 5 ஆகியவைகள்தான் பழுதடைந்திருந்தன. அவை மார